மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டுர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டுர்
2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.07/2024
அ.வ.எண்.55/2020

1. M. யசோதா
2. M. சோமசுந்தரம்
3. M. ராமசந்திரன் ... மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

/எதிராக/

1. கங்காதரன்
2. அருள்குமார்
3. மணிமேகலை ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

4. பாண்டுரங்கன்
5. சீரங்கன் (இறந்தவர்) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 16.12.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–ன் கீழ் உத்தேச தரப்பினர்களை வழக்கில் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 4, 5 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. தாவா சொத்துக்களானது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பாகம்பிரிக்கப்படாத இந்து கூட்டு குடும்ப சொத்துக்களாகும். 1ம் மனுதாரரின் கணவரும், 2, 3 மனுதாரர்களின் தந்தையுமான மூர்த்தி, 4ம் எதிர்மனுதாரர் பாண்டுரங்கன், பெருமாள் ஆகியோர் சீரங்கன் என்பவரின் மகன்கள் ஆவர். மேற்படி சீரங்கன் மற்றும் அவரது மூன்று மகன்களும் தாவா சொத்துக்களை கூட்டாக அவரது வாரிசுகளுடன் அனுபவித்து வந்தனர். கடந்த 20 வருடங்களுக்கு முன்பு மூர்த்தி மனுதாரர்களை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். பின்னிட்டு மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் தாவா சொத்துக்களை பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வந்தனர்.

(ii) இந்நிலையில் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே தாவா சொத்துக்கள் குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் மனுதாரர்கள் பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.64/2018 என்ற வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கு கடந்த 07.11.2022ம் தேதியில் தள்ளுபடியானது. பின்னிட்டு மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக மனுதாரர்கள் மேட்டூர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் A.S.27/2023 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்து, அது நிலுவையில் உள்ளது. வாதி உண்மையை மறைத்து அ.வ.எண்.64/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் தற்போது தாவா சொத்துக்கள் தொடர்பாக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. தற்போது தான் மனுதாரர்களுக்கு இந்த தாவா தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியும். மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்களில் உரிமை உள்ளது. மேற்படி வழக்கை பொறுத்து மனுதாரர்கள் அவசியமான தரப்பினர்கள் ஆவர். எனவே மனுதாரர்களை அசல் வழக்கில் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 4ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா சொத்தானது மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்பதும், மேற்படி சொத்தை மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்பதும் பொய்யான சங்கதியாகும். மேற்படி மனுதாரர்கள் காலம் சென்ற மூர்த்தி என்பவரின் வாரிசுகள் என்பது உண்மை சங்கதியாகும். மேற்படி மூர்த்தி இறந்ததற்கு பின்னிட்டு மனுதாரர்களும், பிரதிவாதிகளின் தகப்பனார் பெருமாள் என்பவரும், வாதியும் மேற்படி தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்த போது தாவா சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்பதும் பொய்யாகும். பின்னிட்டு மனுதாரர்கள் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.64/2018 என்ற வழக்கை தாக்கல் செய்து, அவ்வழக்கு கடந்த 07.11.2022ம் தேதியில் தள்ளுபடியானது.

(ii) மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக மனுதாரர்கள் மேட்டுர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் A.S.27/2023 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்தனர் என்பது உண்மையாகும். தற்போது தான் மனுதாரர்களுக்கு இந்த தாவா தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியும் என்பதும், மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்பதும் பொய்யாகும். தாவா சொத்தானது சீரங்க கவுண்டருக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். சீரங்க கவுண்டர் உயிருடன் இருக்கும்போது தாவா சொத்துக்களை மேற்குபுறமாக உள்ள இரண்டு நிலங்களில் ஒரு நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் மூலமாகவும், கிரயம் மூலமாகவும் விற்பனை செய்துவிட்டார். மேற்படி தாவா சொத்துக்ளுக்கும், மனுதாரர்களுக்கும் எந்தவொரு உரிமையும் கிடையாது. மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.64/2018 என்ற வழக்கு தாக்கல் செய்ததில் மனுதாரர்கள் தாவா சொத்து குறித்து எந்தவொரு ஆதாரமும் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தாவா சொத்தானது கூட்டு குடும்ப சொத்து என கூறுவது நம்ப முடியாததாக உள்ளது. எனவே மனுவை

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 4ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துக்களானது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பாகம்பிரிக்கப்படாத இந்து கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றும், 1ம் மனுதாரரின் கணவரும், 2, 3 மனுதாரர்களின் தந்தையுமான மூர்த்தியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் தந்தை பெருமாளும், 4ம் எதிர்மனுதாரர் பாண்டுரங்கனும், காலம் சென்ற 5ம் எதிர்மனுதாரர் சீரங்கனின் வாரிசுகள் என்றும், மேற்படி சீரங்கனும், அவரது மூன்று மகன்களும் தாவா சொத்துக்களை கூட்டாக அவரது வாரிசுகளுடன் அனுபவித்து வந்தனர் என்றும், கடந்த 20 வருடங்களுக்கு முன்பு மூர்த்தி மனுதாரர்களை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், பின்னிட்டு மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் தாவா சொத்துக்களை பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றும் தெரிவித்துள்ளது தெரிய வருகிறது.

(ii) இந்நிலையில் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே தாவா சொத்துக்கள் குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் மனுதாரர்கள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கு கடந்த 07.11.2022ம் தேதியில் தள்ளுபடியானது என்றும், அதற்கெதிராக மனுதாரர்கள் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில்

உள்ளது என்றும், வாதிகள் மேற்படி உண்மைகளை மறைத்தும், மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமலும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து மனுதாரர்களுக்கு உரிமையுள்ள நிலையில், இவ்வழக்கில் மனுதாரர்களும் அவசிய தரப்பினர்கள் என்றும், எனவே மனுதாரர்களை அசல் வழக்கில் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுதாரர்கள் காலம் சென்ற மூர்த்தி என்பவரின் வாரிசுகள் என்பது உண்மை சங்கதி என்றும், மேற்படி மூர்த்தி இறந்ததற்கு பின்னிட்டு மனுதாரர்களும், வாதிகளின் தகப்பனார் பெருமாள் என்பவரும், 4, 5 பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்ததாக கூறுவது தவறானது என்றும், அதேபோல் தாவா சொத்தை கூட்டாக அனுபவிப்பதில் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் பிரச்சனை இருந்து வந்ததாக கூறுவது பொய்யானது என்றும், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர்கள் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தனர் என்பதும், மேற்படி வழக்கு கடந்த 07.11.2022 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும், அதற்கெதிராக மனுதாரர்கள் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்தனர் என்பதும் உண்மையே என்றும், கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) ஆனால் தாவாசொத்தில் மனுதாரர்களுக்கு உரிமையுள்ளதாக கூறுவது பொய்யானது என்றும், தாவா சொத்து 5 ம் எதிர்மனுதாரர் சீரங்க கவுண்டரின் சுயார்ஜித சொத்து என்றும், மேற்படி சொத்தை 4 ம் எதிர்மனுதாரர், 5 ம் எதிர்மனுதாரரிடமிருந்து தானசெட்டில்மெண்ட் மற்றும் கிரய ஆவணங்கள் மூலம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. மனுதாரர்கள் துர்லாபம் அடைய இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(v) இருதரப்பு வாதங்களையும் கவனமாக பரிசீலனை செய்கையில், 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இம்மனுவில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 4 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் தாவா சொத்து 5 ம் எதிர்மனுதாரர் சீரங்ககவுண்டருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என தெரிவித்துள்ளார். ஆனால், அசல் வழக்கில் தன் பதிலுரையில், தாவா சொத்து 2 ம் பிரதிவாதி/5 ம் எதிர்மனுதாரர் சீரங்கனுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) மேலும் 4 ம் எதிர்மனுதாரர் தன் எதிருரையில், மனுதாரர்கள் காலம் சென்ற தன் சகோதரர் மூர்த்தியின் வாரிசுதாரர்கள் என்பதையும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி மனுதாரர்கள் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தனர் என்பதையும், மேற்படி பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில், மனுதாரர்கள் தற்போது முதலாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளனர் என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளது தெரிய வருகிறது. தற்போது 4, 5 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் ஒரு வழக்கு மூலத்தை குறிப்பிட்டு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள போதிலும், மேற்படி சங்கதிகள் தாவா சொத்தின் பேரிலான 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் உரிமைமூலம் குறித்து ஒரு தெளிவற்ற நிலையை ஏற்படுத்துவது தெரியவருகிறது.

(vii) மேலும் பதிலுரையில் 4 ம் எதிர்மனுதாரர் தாவா சொத்து தன் தந்தையான 5 ம் எதிர்மனுதாரரின் பூர்வீக சொத்து என தெரிவித்துள்ள நிலையிலும், 4 ம் எதிர்மனுதாரர் மேற்படி மனுதாரர்கள் தனது சகோதரரின் வாரிசுதாரர்கள் என்பதை ஒப்புக்கொள்ளும் நிலையிலும், எவ்வாறு தாவா சொத்தில் மனுதாரர்களுக்கு உரிமை ஏற்படவில்லை? என்பது குறித்து எவ்வித விளக்கங்களும் 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

தெரிவிக்கப்படவில்லை என தெரிய வருகிறது. அதேபோல் 4ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கை பொறுத்து ஒரு பிரதிவாதியே எனும் நிலையிலும், இவ்வழக்கின் வாதிகளான 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களே இம்மனுவில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், உத்தேச தரப்பினர்கள்/மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என ஆட்சேபனை செய்ய 4ம் எதிர்மனுதாரர் உரிமையற்றவர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) அதே சமயத்தில், இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் கூட, தாவா சொத்தின் பேரிலான தரப்பினர்களின் உரிமை வழக்கெழுவினாவில் துணைப் பொருண்மைகளாகவும், இடைநிகழ்வாகவும் (Collaterally and incidentally) வருவதால் இவ்வழக்கில் தரப்பினரின் உரிமை குறித்தும் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. அவ்வகையில் உத்தேசதரப்பினர்களான மனுதாரர்கள், தாவா சொத்தின் பேரில் தங்களுக்குள்ள உரிமை குறித்து ஒரு முதல்தோற்ற வழக்கை காண்பித்துள்ள நிலையில், இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து இருதரப்பு வாதுரைகளையும், சாட்சிய, சான்றாவணங்களையும் பரிசீலித்து, விரிவான விசாரணை நடத்தினால்தான் வழக்கில் அனைத்து தரப்பினர்களையும் கட்டுப்படுத்தும் வகையில் இறுதியாகவும், முழுமையாகவும் ஒரு தீர்வு காண இயலும் என்பதாலும், தாவா சொத்தை பொறுத்து தரப்பினர்களிடையே மேலும் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் எழுவதை தவிர்க்கும் வகையிலும், மனுதாரர்களை இவ்வழக்கில் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக சேர்ப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம்

ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2025.01.30 17:52:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2025.01.30 17:52:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.